# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்

## 27.02.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் மாயிதாவின் 17-வது வசனத்தை ஓதினார்கள். அதன் பொருள்:**

அவனது விருப்பத்தைத் தேடுகின்றவர்களை அல்லாஹ் இதன்மூலம் சமாதான வழிகளில் நடத்துகின்றான். மேலும் அவன் தனது கட்டளையினால், அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியினிடத்துக் கொண்டு வருகின்றான். மேலும் நேரான வழியில் அவர்களைச் செலுத்துகிறான். (5:17)

இஸ்லாத்தின் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை 1400 ஆண்டுகளுக்கு முன்பு இருள் நிறைந்த காலத்தில் அனுப்பினான். மீண்டும் ஒருமுறை இருளின் காலம் வரும்போது ஆகரீன்(பின்னவர்)களிலிருந்து உனது உண்மை தாசரை எழுப்புவேன். பிறகு அவர் மூலமே மீண்டும் திருக்குர்ஆனின் உண்மையான போதனையை உலகின் முன் எடுத்து வைப்பேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அறிவிக்கச் செய்தான். மேலும் அவர் மூலமாக உலகம் உண்மையை உணர்ந்து கொள்ளும். இஸ்லாத்தின் இறைவன் உயிருள்ள இறைவன். அவன் உலகத்தின் அமைதி மற்றும் நேர்வழிக்காக எல்லா காலத்திலும் தனது சிறப்பான அடியார்களை அனுப்புகிறான். அதன் மூலம் உலகத்தை நேர்வழியில் நடத்துகிறான்.

அத்துடன் அல்லாஹ் இன்னொரு கட்டளையும் இட்டுள்ளான். அக்காலத்தில் நல்லியல்பு கொண்டவர்களுக்கு, நன்மையின் பக்கம் முன்னேற விரும்புபவருக்கு நேர்வழிகாட்டுகின்றான். ஹிதாயத்தை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஹிதாயத் தருகிறான்.

எனவே, இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலம் மற்றும் அவரது உண்மை தாசரின் காலத்துச் சம்பவங்களை எடுத்து வைப்பேன். அல்லாஹ் ஹிதாயத்தின் பக்கம் முயற்சி செய்பவருக்கு எவ்வாறு ஹிதாயத்தை வழங்குகிறான் என்று அதிலிருந்து தெரிய வரும். அல்லது அம்மனிதரது சில நற்செயலின் காரணமாக அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டி விடுகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் துஃபைல் பில் அம்ர் என்ற ஒரு கண்ணியத்திற்குரிய மனிதர் இருந்தார். நல்ல அறிவுக் கூர்மையுள்ள மனிதர். அவர் ஒருமுறை மக்காவுக்கு வியாபார நிமித்தம் வந்த போது குறைஷிகளில் சிலர் அவரிடம் கூறினர். ''துஃபைலே, வியாபாரத்திற்காக மக்கா வந்துள்ளீர். இங்கு ஒரு மனிதர் (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரைக்) குறிப்பிட்டு, அம்மனிதர் ஒரு நூதனமான குழப்பத்தைப் பரப்பி வருகிறார். நவூதுபில்லாஹ். அவர் எமது ஊரையே பிளவுபடுத்தி விட்டார். சகோதரரை தனது உடன்பிறந்தவருடன் சண்டை மூட்டி விட்டார். தகப்பனாரை மகனுடன் சண்டை மூட்டி விட்டார். தாயைப் பிள்ளையை விட்டும் பிரித்து விட்டார். பயங்கரமான சூனியக்காரர். எனவே, மக்கள் அவரது பேச்சில் மயங்கி விடுகின்றனர். நீரோ உமது கோத்திரத்தின் தலைவராக இருக்கின்றீர். அவரிடமிருந்து தப்பி இருப்பீராக.''

இக்கால மவ்லவிகள் கூறுவது போல கூறினார்கள். அஹ்மதிகளின் பேச்சை கேட்காதீர்கள். அஹ்மதிகளுடன் எந்த மார்க்க விவகாரங்களும் பேசாதீர்கள். பேசினால் தமது சூனியத்தால் உங்களை மயக்கி விடுவர் என்று மவ்லவிகள் கூறி வருகின்றனர். இந்த குழப்பத்தால்தான் 1974-ல் பாகிஸ்தான் மக்களவையில் நடந்த சம்பவங்களை எல்லாம் மக்கள் முன் மறைத்து வைத்துள்ளார்கள். தெளிவுபடுத்தினால் மக்களுக்கு உண்மை எது? பொய் எது? என்று புரிந்து வரும்!

**பிறகு துஃபைல் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

''மக்காவாசிகள் இவ்வளவு எனக்கு கவனமூட்டியிருந்ததால் அவருடைய (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அருகில் கூட போகமாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டேன். மேலும் நான் விரும்பாமலேயே அவரது சப்தம் என் காதில் விழுந்துவிடக் கூடாது என்பதற்காக பஞ்சை வைத்துக் கொண்டேன். மேலும் நான் கஃபா இல்லத்தை வந்தடைந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்று தொழுது கொண்டிருக்கக் கண்டேன். தன்னிச்சையாக அவர் முன்னால் அவர் அருகில் சென்று நின்று விட்டேன். அவர் ஓதிய திருக்குர்ஆன் வசனங்கள் பஞ்சு வைத்த காதிலும் சிறிது விழுந்து விட்டது. அவரது வார்த்தைகள் என்னைக் கவர்ந்தன. நான் என் உள்ளத்தில் கூறிக் கொண்டேன். எனது கேடே! நான் ஒரு அறிவுள்ள மனிதன்! நல்லது கெட்டது நன்கறிந்தவன். இம்மனிதரின் பேச்சைக் கேட்டால் எனக்கு என்ன தீங்கு நேர்ந்துவிடப் போகிறது? அவர் சொல்வது நல்லது என்றால் அதனை நான் ஏற்கப்போகிறேன்! தவறு என்றால் விட்டுவிடப் போகிறேன்! அல்லாஹ் எனக்கு அறிவைத் தந்துள்ளான்!''

இவ்வாறு அல்லாஹ் நல்வாய்ப்பு கொண்டோருக்கு நேர்வழி காட்டுகிறான்.

**மேலும் துஃபைல் பின் அம்ர் கூறுகிறார்:**

சிறிது நேரம் நான் (முஹம்மத் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவருக்காக காத்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை முடித்ததும் தமது வீட்டை நோக்கிச் சென்றார்கள். நானும் பின்னாலேயே போனேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் நுழையும் சமயத்தில் கூறினேன்! முஹம்மத் (ஸல்), உங்கள் சமுதாயம் நீங்கள் பெரும் சூனியக்காரர் என்று கூறியது. ஒருவருக்கொருவர் பிளவை ஏற்படுத்தி சண்டை மூட்டி விட்டு விட்டீர்கள். குழப்பத்தை ஏற்படுத்தி விட்டீர் என்று கூறியது. எந்த அளவுக்கு எம்மை பயமுறுத்தி விட்டது என்றால் நான் எனது காதில் சிறிது பஞ்சை வைத்துக் கொண்டேன். முஹம்மதின் எந்த சப்தமும் என் காதில் விழுந்துவிடக் கூடாது என்று கருதினேன். ஆனால், அல்லாஹ் இவ்வளவுக்குப் பிறகும் உங்களது அறிவார்ந்த வார்த்தைகளைக் கேட்கச் செய்து விட்டான். நான் கேட்டது மிகவும் உன்னதமான வார்த்தைகள். எனக்கு இன்னும் சிறிது விஷயங்கள் கூறுவீராக.

துஃபைல் தொடர்ந்து கூறுகின்றார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு இஸ்லாம் பற்றி இன்னும் நிறைய விஷயங்களைக் கூறினார். திருக்குர்ஆனின் வசனங்களை ஓதிக் காட்டினார். இறைவன் மீது ஆணை! அதனைப் போன்ற சிறந்த வார்த்தைகளை நான் கேட்டதில்லை. பிறகு நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன். கலிமா ஓதினேன். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினேன். நான் ஒரு சமுதாயத்தின் தலைவன். எனது சமுதாயம் எனது வார்த்தையை ஏற்கும். நான் ஊருக்குத் திரும்பியதும் தப்லீக் செய்வேன். நீங்கள் எனக்கு துஆ செய்யுங்கள். அல்லாஹ் எனக்கு வெற்றியைத் தருவானாக! எனக்கு ஆதரவாக ஓர் அடையாளம் கிடைக்க துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். நான் எனது சமுதாயத்திடம் திரும்பினேன்.

**மேலும் அந்த அறிவிப்பில் வருகிறது:**

நான் எனது சமுதாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். மக்கள் குடியிருப்பிலிருந்து நகருக்குள் நுழைந்தன் அடையாளமாக சப்தம் கேட்கத் தொடங்கியது. அப்போது எனது நெற்றியில் இரு கண்களுக்கும் இடையில் ஏதோ ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. அதன் ஒளியை நான் உணர்ந்தேன். நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! இந்த அடையாளத்தை என் முகத்தை தவிர வேறு எங்கும் காட்டாதே. எனது சமுதாயத்தினர் உமது முகம் மாறி விட்டது என்று கண்டிப்பாகக் கூறுவர். மக்கள் எனது முகத்தின் ஒளியைக் கண்டனர். மறுநாள் அங்கு போய் சேர்ந்தார். மறுநாள் அவரது பெற்றோர்கள் அவரை வந்து சந்திக்க வந்தனர். அவர்களிடம் நான் கூறினேன். உங்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு இன்றோடு முடிந்து விட்டது. ஏன்? என்று அவர்கள் கேட்டனர். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டேன். நான் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் பைஅத் செய்து விட்டேன். முஹம்மத் (ஸல்) அவர்கள் என்ன கூறுகிறார்? என்று எனது தந்தை கேட்டார். நான் அவர்களை குளித்து விட்டு வருமாறு கூறினேன். அவர்கள் குளித்துவிட்டு

வந்தார்கள். நான் இஸ்லாத்தின் போதனைகளைக் கூறினேன். அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு எனது மனைவி என்னிடம் வந்தாள். அவளிடமும் அதையே கூறினேன். உன்னோடு எனது தொடர்பு முடிந்து விட்டது. நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன். முதலில் நீங்களும் குளித்து விட்டு வாருங்கள். உங்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை உங்களுக்கு கூறப் போகிறேன்! அவர்களும் அவ்வாறே செய்தார். பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

பிறகு சிறிது காலம் கழித்து அவர் தனது சமுதாயத்திடம் தப்லீக் செய்தார். கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தேன். எனது கோத்திரத்தார் மிகவும் எதிர்ப்பதாகக் கூறினேன். தாங்கள் எனது கோத்திரத்தாருக்கு எதிராக துஆ செய்யுங்கள் என்று வேண்டினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கை உயர்த்தி இவ்வாறு துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வே! கவுஸ் கோத்திரத்தாருக்கு நேர்வழி காட்டுவாயாக! பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், துஃபைலிடம் நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். மிக மென்மையாக அன்புடன் உமது கோத்திரத்தாரிடம் தப்லீக் செய்யுங்கள் என்றார்கள்.

பிறகு துஃபைல் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் தப்லீக் செய்து வந்தேன். இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கும் போய் எதிரிகள் படையெடுத்துச் சென்று எதிர்த்தனர். அஹ்ஸாப் (அகழ்) போர் நடந்தது. அதற்குப் பிறது எனது கோத்திரத்தார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். பெரும் எண்ணிக்கையில் இஸ்லாத்தில் இணைந்தனர். பிறகு துஃபைல் பின் அம்ர் (ரலி) அவர்கள் 70 குடும்பத்துடன் ஹிஜ்ரத் செய்து விட்டார். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களும் அந்த கோத்திரத்தைச் சார்ந்தவரே!

எனவே, மக்கள் ஹிதாயத்தைப் பெறுவதற்கு அல்லாஹ் ஒரு நேரத்தை நிர்ணயித்துள்ளான். பல வருடங்களுக்குப் பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆவை ஒப்புக் கொண்டான். துஃபைல் (ரலி) அவர்களின் கோத்திரம் முஸ்லிமானது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் அவசரப்பட்டதில்லை. தாயிஃப் பயணத்திலும் கூட மலக்குகள் அம்மலையை நெருக்கி நசுக்கி விடுவதாகக் கூறியபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மக்களின் ஹிதாயத்திற்காக துஆ செய்தார்கள். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு துஆவையும் கற்றுத் தந்துள்ளார்கள். அல்லாஹும் மஹ்தி கவ்மி ஃபஇன்னஹூம் லா யஃலமூன் – அல்லாஹ்வே! இந்த சமுதாயத்திற்கு நேர்வழி காட்டுவாயாக. ஏனெனில், இவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இக்காலத்து மக்களுக்காகவும் இந்த துஆவை செய்து கொண்டிருக்க வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்திற்கும் எதிர்ப்புகள் ஏற்பட்டன. முன்னறிவிப்புகளின்படி அல்லாஹ் அன்னாருக்கு ஆதாரவாக பிளேக் நோயின் அடையாளத்தை ஏற்படுத்தி விட்டான். ஆனால், அந்த அடையாளம் வெளிப்பட்ட போது அவர்களுக்கு ஆதரவாக வெளிப்பட்ட அடையாளமாக இருந்தும்கூட அவர்களிடம் ஒரு உருக்கமும் நிம்மதியின்மையும் ஏற்பட்டிருந்தது. படைப்பினத்தின் மீதுள்ள அனுதாபத்தால் அவர்கள் உருகினார்கள். யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி அவர்கள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபுடைய அறிவிப்பை ஆதாரமாக வைத்து விளக்குகிறார்கள். அந்நாளில் நான் பைத்துத் துஆவின் மேல் உள்ள ஓர் அறையில் இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைத்துத் துஆவில் செய்த துஆக்களையும், அவர்களது உருக்கத்தையும் கண்டேன். கேட்பவரும் உருகும் அளவுக்கு அவர்களின் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. பிரசவ வேதனையால் துடிக்கும் ஒரு பெண்ணைப் போன்று அல்லாஹ்வின் சந்நிதானத்தில் விழுந்து துடித்தார்கள். நான் கூர்ந்து கவனித்தேன். அன்னார் இறை சந்நிதானத்தில் மக்களை பிளேக் நோயின் தண்டனையிலிருந்து காப்பாற்றுமாறு துஆ கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வே! இம்மக்கள் பிளேக் நோயால் அழிந்து விட்டால் உனக்கு யார் இபாதத் செய்வார்கள்? மவ்லவி அப்துல் கரீம் சாஹிவின் ரிவாயத்தின் ஒரு சுருக்கத்தை – மையக் கருத்தை இப்போது நான் இங்கு எடுத்துக் கூறியுள்ளேன். பிளேக் நோய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மக்கள் பொய்யாக்கி

மறுத்தன் விளைவால்தான் வந்தது. இருந்தபோதிலும் அன்னார் மக்களுக்கு நேர்வழி கிடைக்க வேண்டும் என்பதற்காக நிம்மதியிழந்தார்கள். இந்த தண்டனைகளை அகற்றுவதற்காக இருள் நிறைந்த இரவுகளில் அழுதழுது துஆ கேட்டார்கள். உலகமோ அப்போது நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது. இதுவே அவர்களது ஒப்பற்ற படைப்பின அனுதாபத்தின் முன்மாதிரியாகும்.

இந்த பிளேக் நோயின் அடையாளம் பலரது ஹிதாயத்திற்கு காரணமாகவும் அமைந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பெரும்பாலாரின் உள்ளத்தில் உலக ஆசை மறைந்துள்ளது. இறைவா! இந்த வேதனையை அகற்றுவாயாக. உலகம் மிகவும் நம்பத்தகாததும் மனிதன் மிகவும் நிலையற்றவனும் ஆவான். ஆனால் கவனமின்மை என்ற காரிருள் பெரும்பாலான மக்கள் அசல் விஷயத்தைப் புரியா விடாமல் தடுத்து வைத்துள்ளது. கண்ணியத்திற்குரிய இறைவனிடம் நான் வேண்டுவது இந்த எளிய உனது அடியார்களுக்கு முழுமையாக உதவி செய்வாயாக. இவர்கள் தமது கடந்த காலத்தில் பட்ட விதவிதமான காயங்களுக்கு களிம்பையும் (மருந்தையும்) நியே வழங்குவாயாக. ஒளியை இருள் என்றும், இருளை ஒளியென்றும் கருதுகின்றவர்களுக்கு இழிவையும் தோல்வியையும் வழங்குவாயாக. அவர்களை தலைகுனிய வைப்பாயாக. அவர்களின் கூச்சல் எல்லை கடந்து விட்டது. இறைவன் புறமிருந்து சரியான நேரத்தில் வந்துள்ள ஓர் அருளை கிடைப்பதற்கு அரிய செல்வமாக அவர்கள் கருதவில்லை. தமக்கு அருளை வழங்கியதற்காக நன்றி செலுத்துவதற்குப் பதில் அறிவீனர்களைப் போன்று சந்தேகத்தில் வீழ்ந்துள்ளனர். நமது வேதனை அல்லாஹ்வின் அர்ஷ் வரை சென்றடைந்து விட்டது. முஹம்மதிய்யத்தின் ஒளி வெளிப்படும் காலம் தூரத்தில் இல்லை.

எனவே இன்று நாம் பார்க்கின்றோம். அன்னாரின் வேண்டுதல்களை அல்லாஹ் கபூல் செய்துள்ளான். அவர்களுக்கு ஆதரவான அடையாளங்களைக் காட்டியுள்ளான். இவ்வாறு பல்வேறு இடங்களில் வெளிப்பட்டுள்ளன. மக்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்கின்றனர். மக்கள் இதன் பக்கம் ஈர்க்கப்படுகின்றனர் என்பதை விளக்கும் சில சம்பவங்கள் கூறுகின்றேன். மலிக் சலாஹுத்தீன் சாஹிப் அவர்கள் மவ்லவி ரஹீமுல்லாஹ் சாஹிபின் நிலைமைகளை விளக்கியவாறு எழுதுகிறார்.

மவ்லவி ரஹீமுல்லாஹ் சாஹிப் மிக உயர்ந்த ஏகத்துவவாதியாக இருந்தார்கள். மார்க்கப் பண்டிதர்கள் பெரியவர்களை சந்திக்கும் வாய்ப்பு அதிகமாக அவருக்கு கிடைத்திருந்தது. ஆனால் அவர்கள் அனைவரையும் ஏதாவது ஒரு வகையில் ஷிர்க்கில் இருப்பதைக் கண்டார்கள். எனவே யாரிடமும் பைஅத் செய்யும் எண்ணம் அவருக்கு ஏற்படவில்லை. எந்த அளவுக்கு எனில், அக்வான் சாஹிப் என்பவரிடம் நீண்ட தூரம் பயணம் செய்து அங்கு வந்து சேர்ந்தார். அவரிடம் சிறிது நேரம் உரையாடிய பிறகு கூறினார். நான் எவ்வளவு சிரமப்பட்டு இவரை வந்து சந்தித்தேன். ஆனால் இந்த அக்வான் சாஹிப் கூட ஷிர்க்கை போதிக்கிறார் என்று கூறி பைஅத் செய்யாமல் திரும்பி விட்டார். மவ்லவி சாஹிப் மிகவும் திருக்குர்ஆன் மீது பற்று கொண்டவர். பின்னாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார். அன்னாரிடம் பேரன்பு கொண்டவர். அறிவிப்பு செய்பவர் கூறுகிறார். இவருக்கு பலமுறை கஷ்ஃப் காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் பல நபிமார்களையும் கனவில் கண்டுள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையையும் தெளிவான இல்ஹாம்களும் அவருக்கு தமது கஷ்ஃப்கள் மூலமே தெளிவுபடுத்தப் பட்டிருந்தன. இந்த வகையில் அன்னார் கூறுகிறார்கள்:

ஒரு முறை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் பற்றி அல்லாஹ்விடம் இஸ்திகாரா செய்தேன். பதிலுக்கு ஒரு மணமகன் போன்று தோற்றமுள்ள ஒருவர் விண்ணிலிருந்து இறங்குகிறார். மஸீஹ் வானத்திலிருந்து இறங்குகிறார் என்று என் உள்ளத்தில் போடப்பட்டது. நான் திரையை அகற்றிப் பார்த்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டேன். உடனே அவர்களிடம் பைஅத் செய்தேன்.

பிறகு இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தின் பிஜியில் நடந்த ஒரு சம்பவம். அங்கு அக்காலத்தில் கிறித்தவம் நல்ல மும்முரமான நிலையிலிருந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் இருந்து வர வேண்டும் என்று முஸ்லிம்களைப் போன்று கிறித்தவர்களும் எதிர்பார்த்திருந்தனர்.

எனவே, பஷீர் கான் சாஹிப் என்பவர் எழுதுகிறார்:

இந்நிலையில் என் உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. கிறித்தவம் உண்மை எனில் கிறித்தவனாவதில் ஒரு தவறும் இல்லை. அல்லாஹ் எனக்கு அருள் புரிந்திருந்தான். நான் கிறித்தவனாகவில்லை. ஆனால், சிந்தனை செய்து கொண்டிருந்தேன். எனது கனவில் ஒரு மனிதரை சந்தித்தேன். மிகவும் கம்பீரமாக அவர் என்னிடம் கூறினார். முஹம்மத் பஷீர் எச்சரிக்கை! எந்த மனிதரை நீ தேடுகிறாயோ அது மஸீஹ் நாஸிரி (நாசரேத்தில் தோன்றிய அந்த மஸீஹ்) அல்ல. மாறாக, அவர் வேறு ஒருவர். அவர் உலகில் தோன்றி விட்டார்.

அப்போது பிஜிக்கு வந்த முதல் முபல்லிக் சேக் ருவாயத் சாஹிப் பிஜிக்கு வந்து சேர்ந்து விட்டார். அவ்வேளையில் எனது தந்தை முஹம்மது காஸிம் சாஹிப் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். ஆனால் எனது கவனம் இதன் பக்கம வரவில்லை. ஆனால் மேற்கண்ட கனவு கண்ட பிறகு ஜமாஅத்தின் பக்கம் எனது கவனம் திரும்பியது. நானும் பைஅத் செய்தேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்த பிறகு இஸ்லாத்தின் மீது பெரும் அன்பு எனக்கு ஏற்பட்டு விட்டது. நல்ல புரிதிறனும் தொலைநோக்கும் அல்லாஹ் எனக்கு வழங்கினான். இஸ்லாத்தின் உண்மையை கிறித்தவர்களிடம் எடுத்து வைக்கும் தைரியமும் கிறித்தவத்தின் பொய்யை நிரூபித்துக் காட்டும் தகுதியும் எனக்கு ஏற்பட்டது.

பிறகு இன்னொரு சம்பவம். இதுவும் இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தில் நடந்தது தான்.

ஸிராலியோனின் ஓர் அஹ்மதி நண்பர். இவருக்கும் அல்லாஹ் கனவின் மூலம் அஹ்மதிய்யத்தை தெளிவுபடுத்தினான். அவர் கூறுகிறார். 1939 ஆம் ஆண்டு நான் ஓர் ஊரில் வசித்து வந்தபோது அவ்வூரின் மாலிக்கி மஸ்ஹபைச் சார்ந்த ஒரு மஸ்ஜிதின் அருகில் நின்று கை கழுவிக் கொண்டிருந்தேன். ஆப்பிரிக்கா மக்கள் பொதுவாக மாலிக் மஸ்ஹபைச் சார்ந்தவர்கள். கையை அப்படியே விட்டவாறு கை கட்டாமல் தொழுவார்கள். பிறகு என் முன்னாள் ஒரு வெள்ளை நிறத்தவர் அன்னியரான ஓர் நண்பர் திருக்குர்ஆனையும், பைபிளையும் எடுத்துக் கொண்டு என்னிடம் வருகிறார். இவை அனைத்தும் கனவில் நடப்பவை. என் அருகில் வந்ததும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுகிறார். பிறகு இப்பள்ளியின் இமாம் யார்? என்று என்னிடம் விசாரிக்கிறார். நான் அவரைச் சந்திக்க விரும்புகிறேன் என்கிறார். அப்பா என்ற பெயருள்ள அந்த பள்ளியின் இமாமை கூப்பிடுவதற்காக போய் விட்டேன். அதற்குள் மஸ்ஜிதின் மெஹ்ராபில் அம்மனிதர் தொழுகை நடத்துவதற்காக நிற்கிறார். பிறகு அவ்விடத்திலேயே எங்களிடம் திருக்குர்ஆன் ஓதுமாறு கட்டளையிடுகிறார்கள். பிறகு அந்த அன்னிய மனிதர் எங்களது பள்ளியின் இமாமைப் பார்த்துக் கூறுகிறார். உங்களுக்கு சரியான முறையில் தொழுவது எப்படி என்று கற்பிக்கவே வந்துள்ளேன். இத்துடன் எனது கண்கள் திறந்து விட்டன. விழித்துக் கொண்டேன். காலையிலேயே எனது முஸ்லிம் நண்பர்களிடம் இக்கனவு குறித்து கூறி விட்டேன். பிறகு கூறுகிறார். இந்த கனவு கண்டு ஒரு வாரம் கழித்து காலை வேளையில் அதே மஸ்ஜிதின் வளாகத்தில் கை கழுவி விட்டு ஒரு மரத்தின் கீழ் அமைதியாக நின்றேன். சில நிமிடங்களில் என் முன்னால் ஒரு மனிதர் வருகிறார். அவர் அஹ்மதி முபல்லிக் ஆவார். அல்ஹாஜ் மவ்லானா நதீர் அஹ்மத் அலி சாஹிப். அவர் என்னிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுகிறார். இங்கு தங்குமிடம் எங்கு கிடைக்கும் என்று விசாரிக்கிறார். எனக்கு ஆச்சர்யம் என்னவென்றால், சில நாள் முன்னர் நான் கண்ட கனவில் இதே சம்பவம் இன்று அப்படியே நிறைவேறுகிறது என்பதுதான். மவ்லவி அல்ஹாஜ் நதீர் அஹ்மத் அலி சாஹிப் உடைய உருவம் எனக்கு கனவில் காட்டப்பட்டிருந்தது. கனவில் கண்ட அதே உடை அணிந்திருந்தார். எனக்கு விருந்தோம்பும் விஷயத்தில் நல்ல ஆர்வம் இருந்தது. எனவே வேறு ஒரு இடத்தில் தங்க வைப்பதற்குப் பதில் என் வீட்டிற்கே அவரை அழைத்து வந்தேன். எனது வீட்டை காலி செய்து அவருக்கு கொடுத்தேன். பிறகு எமது முஸ்லிம் நண்பர்களை அழைத்தேன். நான் உங்களுக்கு சில நாட்களுக்கு முன் கனவில் கண்டேன் என்று சென்னேனல்லவா? இன்று அது நிறைவேறி விட்டது. இந்தப் பெரியவர் வந்துள்ளார். எனது வீட்டில் தங்கியுள்ளார். சில நாட்களுக்கு பிறகு நான் பைஅத் செய்தேன்.

இதற்குப் பிறகு இவரது தப்லீக்கினால் அல்லாஹ்வின் அருளால் அவ்வூரின் அநேக முஸ்லிம்கள் அஹ்மதிகளாயினர்.

இக்காலத்திலும் அல்லாஹ் மக்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துகிறான். 40 அல்லது 60 ஆண்டுகள் முன்னர் நடந்த விஷயங்களை கூறினேன். இப்போது கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களைக் கூறுகிறேன். எவ்வாறு அல்லாஹ் மக்களுக்கு ஹிதாயத்திற்கான ஏற்பாடு செய்கிறான்! எவ்வாறு உதவி செய்கிறான்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஆதரவான அடையாளங்களுக்கு இன்றும் குறைவில்லை. நிபந்தனை மனித உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். ஹிதாயத்தைத் தேட வேண்டும்.

ஷத்தாத் அப்துல் காதிர் சாஹிப் வளைகுடாவைச் சேர்ந்தவர். அவர் ஒரு முறை கனவில் கண்டார். அவரை ஒருவர் உம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தரிசிக்க கூட்டிச் செல்கிறேன், வாருங்கள் என்று அழைத்துச் செல்கிறார். ஒரு நிமிடம் நான் பார்க்கிறேன். சுவரின் உச்சியில் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் நிற்கிறார்கள். என்னைப் பார்த்து அன்னார் புன்னகை செய்கிறார்கள். பிறகு பார்க்கிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் சுவருக்கும் நடுவில் ஒரு கோதுமை நிறமுள்ள மனிதர் நிற்கிறார். அப்போது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவரைச் சுட்டிக்காட்டி கூறுகிறார்கள். ஹாஸா ரஸூலுல்லாஹ் இவர் ஒரு அல்லாஹ்வின் தூதர். பிறகு கிழக்கு முகமாக வெளிச்சத்தை நோக்கிப் போகிறோம். அங்கும் அதே மனிதர் நிற்கிறார். நான்கு வருடங்களுக்குப் பிறகு 2008 -ல் தற்செயலாக உங்களது MTA Channel சேனல் பார்க்கிறேன். அங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நான் கனவில் கண்ட அதே மனிதரைக் கண்டேன். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புகைப்படமாகும். உடனே அவர் பைஅத் செய்தார்.

இவ்வாறு அமிர்தசரஸில் உள்ள ஒரு பெண். ஹாலா முஹம்மது அலி சாஹிபா அவர் கூறுகிறார். ஹஸ்ரத் இமாம் மஹ்தி மற்றும் அவரது ஒரு ஜமாஅத் தண்ணீரில் மேல் போய்க் கொண்டிருக்கிறது. எனக்கும் உங்கள் கூட்டத்தில் இடம் தருமாறு கேட்கிறேன். அப்போது அவர், திரும்பி வரும்போது உங்களையும் அழைத்துச் செல்கிறோம் என்று கூறி விட்டார்கள். அந்தக் கனவுக்குப் பிறகு நான் சூஃபியத்தில் உண்மை இருக்குமோ என்று தேடினேன். ஆனால் அதில் எனக்கு மன நிறைவு கிடைக்கவில்லை. எனது கனவுக்கு அது பொருளில்லை என்று விளங்கினேன். ஆனால் என் கூட இருந்தவர்கள் சூஃபியிசவாதிகளைத்தான் நான் என் கனவில் கண்டிருப்பேன் என்று அடம்பிடித்தனர். வீட்டில் வந்து நான் தொலைக்காட்சி சேனலைப் பார்த்துக் கொண்டிருந்தபோது MTA3 அல் அரபிய்யா தென்பட்டது. எனது வியப்புக்கு அளவேயில்லை. நான் கனவில் கண்டே அதே மனிதரை அந்த சேனலைக் கண்டேன். இவர் இமாம் மஹ்தி. தண்ணீரின்மேல் சென்று கொண்டிருக்கிறார் என்று காட்டப்பட்ட அதே மனிதர்.

பிறகு அப்துர் ரஹீம் சாஹிப் பஞ்சான். இராக்கைச் சேர்ந்தவர். அவர் கூறுகிறார். சில வருடங்களுக்கு முன் நான் கனவில் கண்டேன். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் நீங்கள் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். உடனே நான் அவர்களிடம் பைஅத் செய்கிறேன். இந்த சம்பவம் நடந்து சில வருடங்களே ஆகின்றன. இரண்டு மூன்று வருடங்கள் முன்பு நடந்த சம்பவங்களைத் தான் கூறி வருகிறேன்.

இதுபோன்று பல நாடுகளில் நடந்துள்ளன. மொரீசியஸ் மிகத் தூரத்தில் உள்ள ஒரு தீபகற்பம். அங்கு நமது முபல்லிக் எழுதுகிறார். ரோட்ரிக் என்ற சின்ன ஒரு தீபகற்பம். மொரீசியஸைச் சார்ந்த ஒரு தீவு. 36 ஆயிரம் பேர்தான் மொத்தமே அங்குள்ள மக்கள் தொகை. ரோட்ரிக்கில் நான் காலையில் தப்லீக் செய்யும் பொருட்டு போய்க் கொண்டிருந்தேன். ஒரு கிறித்தவப் பையனை தப்லீகிற்காக தேர்ந்தெடுத்து பேசிக் கொண்டிருந்தேன். அந்தப் பையனின் தாயாரின் தாயாருக்கு நான் அங்கு வந்த தன் நோக்கம் தெரிந்தது. நான் அங்கு தப்லீக் செய்து கொண்டிருந்தேன். அப்போது அப்பையனின் நானி (தாயாரின் தாயார்) கூறினார். நீங்கள் கொண்டு வந்துள்ள இச்செய்தி முற்றிலும் உண்மையானது. நான் ஒப்புக் கொள்கிறேன். ஏனெனில் வீட்டிலுள்ள அனைவரின் சாட்சியாக நான் ஒரு கனவு கண்டு நீங்கள் வரப்போகிற செய்தியைச் சொல்லியிருந்தேன். ஓர் அன்னிய மனிதர் நம் வீட்டிற்கு வருகிறார். அவரது கைகளை கைகளைப்

பற்றியவாறு நான் கூறுகிறேன். இந்த உறவு முறைக்கு நான் இசைகிறேன் என்று கூறுகிறேன். நீங்கள் வீட்டுக்குள் நுழைந்ததுமே எனது அறைக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். நாம் கனவில் கண்ட அதே மனிதரல்லவா இவர் என்று ஆச்சர்யமடைந்து கொண்டிருந்தேன். பிறகு இரண்டு மூன்று நாள் கழித்து நான் இரண்டாவது முறை அங்கு சென்றேன். திருக்குர்ஆன் மற்றும் சில போட்டோக்களை அன்பளிப்பாக வழங்கினேன். பிறகு மூன்றாவது முறை அங்கு சென்றேன். பைஅத் ஃபார்ம் எடுத்துக் கொண்டு சென்றேன். பைஅத் நிபந்தனைகளை வாசித்துக் காண்பித்தேன். அப்பெண்ணின் கண்களில் இருந்து கண்ணீர் வழிகிறது. இந்த பைஅத் பாரத்தை நிரப்புவதில் எனக்கு சிறிதும்கூட மறுப்பு இல்லை. நேற்றிரவு நான் கனவு கண்டேன். என் முன்னால் ஓர் இரண்டு காகிதங்கள் கொண்டு வரப்படுகின்றன. அதே போன்று இன்று உங்கள் கையில் ஒரு நீண்ட ஒரு Folder வைத்துள்ளீர்கள். மேலும் கண்ட கனவை வீட்டில் உள்ளோருக்கு சொல்லியுள்ளேன். அவர்கள் அனைவரும் சாட்சி.

பிறகு அப்பெண் பைஅத் செய்து விட்டார்கள். அது ஒரு சிறிய தீவு. நானும் அங்கு சென்று வந்துள்ளேன். அல்லாஹ்வின் அருளால் அங்கு ஜமாஅத்தின் இரண்டு பள்ளிவாசல்கள் அங்கு உண்டு. மக்கள் சிறிது சிறிதாக கிறித்தவத்தில் இருந்து இஸ்லாத்திற்குள் வந்து கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவின் ஒரு சம்பவம். அங்குள்ள முபல்லிக் எழுதுகிறார். மெக்ஸிகோவைச் சார்ந்த 5 பேரைக் கொண்ட ஒரு குடும்பம். அக்குடும்பத்துப் பெண் தனது கனவைக் கூறுகிறார். எமது குடும்பம் முழுவதும் கத்தோலிக்க கிறத்தவர்களாக இருந்தும் கிறித்தவத்தின்படி நாங்கள் ஒருபோதும் அமல் செய்ததில்லை. அவரது வயது 27 ஆனபோது ஒரு வலி ஏற்பட்டது. மருத்துவமனை சென்றேன். மருந்து எடுத்தேன். எப்போதும் ஒரே இறைவனிடம் மட்டும் துஆ கேட்பேன். ஒருநாள் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உருவத்தை ஒரு கண்ணாடியில் பார்த்தேன். அன்னார் எனக்கு உடல்நலம் கிடைக்கும்பொருட்டு தமது கையை என் மீது வைக்கிறார்கள். இறை அருளால் அன்றிலிருந்து இன்றுவரை நான் முழு ஆரோக்கியமாக உள்ளேன். கண்ணாடியில் கண்ட அவ்வுருவத்தை இன்று வரை நான் காண முடிந்ததில்லை. அந்நிலையில் ஒரு மெக்ஸிகன் பெண் எனக்கு ஒரு புத்தகம் படிக்கத் தந்து அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். அந்த நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போட்டோவைப் பார்த்தேன். எனக்கு வியப்பும் கண்ணீரும் பெருக்கெடுத்தது. உண்மையைக் கண்டறிய அல்லாஹ் எனக்கு வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி தெரிவித்தவாறு நான் அழுதேன். பிறகு அவர் குடும்பத்துடன் பைஅத் செய்தார்.

இதே போன்று பல்கேரியாவில் உள்ள நமது முபல்லிக் எழுதுகிறார். உலகில் ஒவ்வொரு இடத்திலும் அல்லாஹ் மக்களுக்கு ஹிதாயத் வழங்கும் காட்சியை காண்கிறோம். அவர் கூறுகிறார். எனது நண்பரின் மனைவி முதலில் அஹ்மதியாகி விடடார். அவர் அஹ்மதியாகவில்லை. காரணம் அவரது குடும்பம் கிறித்தவக் குடும்பம். ஒரு சர்ச்சை அக்குடும்பம் பராமரித்து வந்தது. 2005 -ல் ஜல்ஸா ஸாலானா ஜெர்மனியில் தமது மனைவியுடன் வந்து கலந்து கொண்டிருந்தார். அப்போது என்னையும் சந்தித்தார். திரும்பிச் செல்லும்போது அவரிடம் நல்ல தாக்கம் ஏற்பட்டிருந்தபோதிலும் பைஅத் செய்யவில்லை.

ஒரு நாள் அங்கு நமது சென்டருக்கு வந்தார். தான் பைஅத் செய்ய வேண்டும் என்றார். ஏன் இவ்வளவு அவசரம்? என்ன காரணம் என்று கேட்டேன்.

நேற்று இரவில் கனவில் கலீஃபத்துல் மஸீஹை (ஐந்தாவது கலீஃபாவை) கண்டேன். அன்னார் என்னிடம் கூறுகிறார்கள். நீர் என்னிடம் வரவில்லை. இப்போது நான் உம்மிடம் வருகிறேன் என்று கூறியவாறு என் வீட்டுக்கு வருகிறார்கள். எனக்கு மிகவும் வெட்கம் ஏற்பட்டது. பிறகு நான் பைஅத் செய்து விட வேண்டும் என்று உடனேயே முடிவு செய்து விட்டேன். இவ்வாறு அல்லாஹ் ஹிதாயத்தை வழங்குகிறான்.

அப்துல் அஸீஸ் ஸாலாத் சாஹிப் குவைத்தைச் சார்ந்தவர். ஒரு பெருநாள் இரவு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை கனவில் கண்டேன். காட்சி எவ்வாறிருந்தது எனில் நான் ஒரு பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து எனது விடைத்தாளை

வாங்கினார்கள். அங்கு இன்னும் பலர் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது பேப்பரில் டிக் செய்கிறார்கள். அதற்குப் பிறகு நான் பள்ளியில் இருக்கிறேன். என்னுடன் எமது தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹும் இருக்கிறார்கள். பள்ளிவாசல் மக்களால் நிறைந்து உள்ளது. மக்கள் அவரிடம் பைஅத் செய்கிறார்கள். நானும் அருகில் சென்று கையை நீட்டி பைஅத் செய்கிறேன்.

மாஸ்கோவிலிருந்து நமது முபல்லிக் இஸ்ஸத்துல்லாஹ் சாஹிப் எழுதுகிறார். 27 மே அன்று நமது பிரச்சார நிலையம் வந்து பைஅத் செய்ய விருப்பம் தெரிவித்தார். கூறினார். இன்று கண்டிப்பாக நீங்கள் எனது பைஅத்தைப் பெற வேண்டும். ஏனெனில் இன்று கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். நான் இனி மேலும் தாமதம் செய்ய விரும்பவில்லை. மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக தனது கனவை விவரித்தவாறு கூறினார். நான் ஒரு முன்பின் தெரியாத பாதையில் பஸ்ஸில் போகிறேன். பஸ்ஸின் பின் பகுதியில் நிற்கிறேன். திடீரென்று பஸ் வேகமாக செல்கிறது. பஸ்ஸின் பிற்பகுதி துண்டிக்கப்பட்டு ஒரு மாடாக மாறி விட்டது. அதன் மேல் ஏற முயற்சிக்கிறேன். முடியவில்லை. உடனே அங்கு திடீரென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்க்கிறேன். அன்னார் தமது வலது கரத்தை என்னை நோக்கி நீட்டிக் கூறுகிறார்கள். எனது கையை உறுதியாகப் பற்றிப் பிடிப்பீராக. அவ்வாறு செய்தால் நீர் அழியமாட்டீர். நான் எப்படிப் பிடிப்பேன்? எனக்கு சக்தியில்லையே? என்று கூறுகிறேன். உடனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தானே எனது கையைப் பிடித்து மேலே இழுத்தார்கள்.

இவ்வாறு புர்கினோஃபாஸோவின் சான்வி இஸாக் சாஹிப் அவரது ஒரு அனுபவத்தை நமது முபல்லிக் கூறுகிறார். நமது ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள பள்ளிவாசலில் ஓர் மவ்லவி ஜமாஅத்திற்கு எதிராக குத்பா கொடுத்தார். ரேடியோ அஹ்மதிய்யா கேட்கக் கூடாது என்று கடுமையாக மக்களுக்கு கட்டளையிட்டார். அவர்களிடத்தில் ஜமாஅத்திற்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை. எனவே, ஒரே விஷயம் அஹ்மதியின் பேச்சை கேட்காதீர்கள் என்று மட்டும் பிரச்சாரம் செய்து வந்தார். மக்காவின் நிலைமையை நான் முதலில் கூறினேன். அதே நிலைமைதான் இங்கும். நான் அந்த இமாமிடம், நாங்கள் ரேடியோவை கேட்காவிட்டால் உண்மையை எவ்வாறு புரிய முடியும்? இமாம் கூறினார்: கண்டிப்பாக அஹ்மதிகளின் ரேடியோவை கேட்கவே கூடாது. அது சரியில்லை என்றார்.

அப்போது நான் கூறினேன். சரி நான் வேறு ஒரு வழியில் முயற்சிக்கிறேன். புர்கினோஃபாஸோவில் உள்ள இந்த ஊரில் எத்தனை முஸ்லிம் பிரிவுகள் உள்ளனவோ அனைத்தின் பெயரையும் சிறு துண்டில் எழுதிப் போட்டு எடுப்போம். எந்த ஜமாஅத்தின் பெயர் உண்மையானது என்று வருகிறது என்று பார்ப்போமா என்றேன். அவ்வாறே செய்யப்பட்டது. ஒரு சிறு குழந்தையை விட்டு சீட்டு எடுக்குமாறு கூறிய போது அதில் ஜமாஅத்தே அஹ்மதிய்யா என்று வந்தது. பிறகும் இமாம் சாஹிபுக்கு ஆறுதல் ஏற்படவில்லை. மீண்டும் ஒரு முறை செய் என்றார். மீண்டும் இரண்டாவது முறையும் எடுக்கப்பட்டது. ஜமாஅத் அஹ்மதிய்யா என்றே பெயர் வந்தது. அப்போதும் அவருக்கு ஆறுதல் ஏற்படவில்லை. மூன்றாவது ஒரு முறை எடுக்குமாறு கூறினார். மூன்றாவதும் எடுக்கப்பட்டது. அதேபோன்று வந்தது. இமாம் சாஹிபுக்கு மிகவும் சங்கடமாகி விட்டது. என்னிடம் பிறகு அவர் ஈமான் கொள்வதற்கு அதுவே காரணமாகி விட்டது.

நார்வேயில் ஒரு சம்பவம். 7 மே 2004 –ன் எனது குத்பா தொலைக்காட்சியில் வந்து கொண்டிருந்தது. ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள ஒருவர் போன் செய்து என்னை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தார். இந்த குத்பா கேட்டு என்னிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார். உடனே தாம் பைஅத் செய்ய விரும்புவதாக கூறினார். இவ்வாறு அல்லாஹ் பைஅத்திற்கான ஏற்பாட்டைச் செய்தான்.

இவ்வாறு போஸ்னியாவில் தப்லீகின் கீழ் இருந்த ஓர் இளைஞர் கனவின் மூலமாகவே பைஅத் செய்தார். அவ்விளைஞர் தான் கண்ட கனவு குறித்து விளக்குகிறார்.

நான் ஒரு பெரிய நகரத்தில் சென்று கொண்டிருக்கிறேன். அங்கு நிறைய யஹூதி கிறிஸ்தவர்களைப் பார்க்கிறேன். வியப்பும் அருவருப்புமாக இங்குமங்குமாக சுற்றி வருகிறேன். திடீரென்று எனது பார்வை எனது

வலது புறம் படுகிறது. ஓர் அழகான மரம். அதன் கீழ் ஒரு கூட்டம் உட்கார்ந்திருக்கிறது. அவர்கள் அனைவரும் வெண்ணிற ஆடை அணிந்திருக்கின்றனர். தலைப்பாகை அணிந்துள்ளனர். நான் ஆப்பிரிக்க ஜல்ஸாவுக்கு சென்ற போது வட்டமாக ஒரு கூட்டம் அமர்ந்திருந்தது. அவர்கள் முகத்தில் ஒரு புன்னகை தெரிந்தது. இவர்கள் நிச்சயமாக அஹ்மதிகளாகவே இருக்க வேண்டுமென்று கனவில் கண்டதை வைத்து கருதுகிறேன். இவ்வாறு பைஅத் செய்தேன்.

இவ்வாறு நிறைய சம்பவங்கள். பல்வேறு நாடுகளின் சம்பவங்கள் உள்ளன. பிறகு ஃபிஜிவுடைய நமது முபல்லிக் எழுதுகிறார்.

ஒரு இந்து மனிதர். அவருக்கு ஒரு முஸ்லிம் பெண்ணுடன் திருமணம் நடந்திருக்கிறது. ஒருநாள் அவரை சக்திக்க அவர் வீட்டுக்குப்போன போது அழுதவாறு கூறினார். எனது மனைவி நோன்பு வைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார். நான் எனது கனவில் பார்க்கிறேன். இரு மனிதர்கள் என் முன் வந்து எங்களுடன் சேர்ந்து விடுங்கள் என்றனர். வெள்ளை உடை அணிந்திருந்தார் என்று கூறி உடனேயே பைஅத் செய்தார்.

பிறகு ஜெர்மனியைச் சார்ந்த உருது முஸ்லிம். அவர் தனது மூன்று மகள்களுடன் நமது தப்லீக் ஸ்டாலுக்கு வந்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போட்டோ பார்த்து அதிலிருந்து பேச்சு தொடங்கியது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவர் வர முடியும் என்று கோபத்தில் பேசினார். 15 நிமிடங்கள் பேச்சுக்குப் பிறகு நமது மக்கள் அவரது போன் நம்பர் வாங்கிக் கொண்டனர். கொடுத்து விட்டுப் போய் விட்டார். மறுநாள் விருந்திற்கு அவரை அழைத்தனர். தப்லீக் தொடர்ந்தது. நூல்கள் அவருக்கு வழங்கப்பட்டன. சில நாட்களுக்குப் பிறகு அவர் போன் செய்தார். நான் உங்கள் புத்தகங்கள் எதையும் படிக்கவில்லை. அனைத்தையும் எரித்து விட்டேன். ஏனெனில் அஹ்மதிகள் தருகின்ற எதையும் படிக்கக் கூடாது என்று எங்கள் மவ்லவிகள் கூறியுள்ளனர். உடனே நமது முபல்லிக், சரி இரவில் நம் வீட்டிற்கு வாருங்கள். நீங்கள் நான் கூறுவதை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் கூட நட்புடன் பழகுவதில் தவறில்லையே? என்று கூறினார்.

அவரும் மறுநாள் பகலில் வந்தார். வரும்போது அஹ்மதி வீட்டில் ஏதும் சாப்பிட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் நோன்பு வைத்துக் கொண்டு வந்தார். பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு நீண்டு கொண்டே சென்றது. நோன்பு திறக்கும் நேரம் வந்தது. எப்படியும் சாப்பிட்டே ஆக வேண்டும். பிறகு சாப்பிட்டார். நான் கூறினேன். நீங்கள் உங்கள் மவ்லவிகள் கூறுவதை ஒருபுறம் வையுங்கள். 40 நாள் மிகுந்த உருக்கத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையைக் குறித்து அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள். அந்த நேரத்தில் எந்த ஒருதலைப்பட்சமான சிந்தனையும் இன்றி துஆ செய்யுங்கள். மறுநாள் அவர் வேலை செய்யும் இடத்திலிருந்து போன் வந்தது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய போட்டோ வேண்டும். பிறகு நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள் என்று கேட்ட போது நான் இப்போது எனது வேலை செய்யும் இடத்திலிருந்து வேலையைப் போட்டு விட்டு வருகிறேன். ஒரு மறைமுகமான சப்தம் ஒன்றை நான் கேட்டேன். ஆதாரம் என்ன கேட்கிறீர். உமக்கு ஆதாரம் தரப்பட்டு விட்டது. அதோ அவரது கனவு ஒன்றும் நினைவூட்டப்பட்டது. அக்கனவில் என்னை (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்) ஒரு இராணுவத்தளபதியாகவும் ஒரு பட்டாளத்திற்கு கட்டளையிட்டுக் கொண்டிருப்பதாகவும் கண்டார். கூடவே மலக்குகளும் இருக்கின்றனர். இந்தக் கனவு நினைவுக்கு வந்ததும் அவர் பைஅத் செய்து விட்டார்.

இந்த சில சம்பவங்களை நான் கூறியுள்ளேன். ஆனால் இதுபோன்று எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. சில சம்பவங்கள் ஜல்ஸாவில் கூறப்படுகின்றன. ஆனால் அனைத்தையும் கூறுவதற்கும் அப்போது நேரம் இருப்பதில்லை. காதியான் ஜல்ஸாவில் இந்த சம்பவங்கள் கூற வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்கு சந்தர்ப்பம் அமையவில்லை. எவ்வாறிருப்பினும் சில சம்பவங்களை இந்த தலைப்பில் தற்செயலாக எடுத்து வைக்கப்பட்டு விட்டன. இவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு

ஆதரவாக மக்களுக்கு ஹிதாயத்திற்கான ஏற்பாட்டை செய்கிறான். இன்று வரை செய்து கொண்டிருக்கிறான். உலகிற்கு எப்போதும் நேர்வழியைக் காட்டிக் கொண்டிருப்பதற்காகவும் நம்மையும் ஹிதாயத்தில் எப்போதும் நிலைநிறுத்தவும் துஆ செய்கிறோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிதாயத்தில் நிலைநிற்பதற்காகவும் நிறைய துஆக்களை கற்றுத் தந்துள்ளான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீர் இறைவனிடம் வேண்டுவீராக. அல்லாஹ்வே எனக்கு நேர்வழி காட்டுவாயாக. நேரான வழியில் நிலைத்திருக்கச் செய்வாயாக. உனது நேர்வழியை நினைவில் இருக்கச் செய்வாயாக. நேராக இருக்கச் செய் என்பதன் பொருள் மார்க்கத்தில் நேரான வழியில் நிற்றல் என்பதாகும். நேரான வழியைக் காட்டுவது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களிலிருந்து விளக்கி விட்டேன். அதாவது மூன்று விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். ஒன்று, அல்லாஹ்வுக்குரிய கடமையை நிறைவேற்றுதல். இரண்டாவது, அடியாருக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல், மூன்றாவது, தனது நஃப்ஸுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல். ஆனால் அனைத்து விஷயங்களின் அடிப்படை இறைவனின் ஏகத்துவத்தின் பக்கம் செல்லுதல். எப்போதும் இறைவனின் நினைவில் இருத்தல் ஆகும்.

இது தொடர்பாக ஒரு ஹதீஸில் வருகிறது. அபு இஸ்ஹாக் கூறுகிறார். அபுஆபஸ் அப்துல்லா கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள். அல்லாஹ்வே உன்னிடம் ஹிதாயத், தக்வா, தூய்மை என்ற வெகுமதியை கேட்கிறேன். இன்னொரு துஆ கற்றுத் தந்துள்ளார்கள். அபூமாலிக் இடமிருந்து ஓர் அறிவிப்பு வருகிறது. அவர் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஒரு மனிதர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மனிதருக்கு இவ்வாறு துஆ கற்றுத் தருவார்கள்.

அல்லாஹூம் மக்ஃபிர்லி வர்ஹம்னி, வஹ்தினி, வர்ஸுக்னி – அல்லாஹ்வே என்னை மன்னிப்பாயாக. எனக்கு கருணை காட்டுவாயாக. எனக்கு நேர்வழி காட்டுவாயாக. எனக்கு ரிஸ்க் வழங்குவாயாக. ஹிதாயத் அல்லாஹ்தான் வழங்குகிறான். பிறகு அதனை வளர்ச்சியடையவும் செய்கிறான். ஹிதாயத் என்பது ஓரிடத்தில் நிற்கக் கூடிய ஒன்றல்ல. அதாவது ஹிதாயத் பெற்றவரின் தகுதியை அல்லாஹ் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டே செல்லச் செய்கிறான்.

மேலும் இன்னொரு துஆ திருக்குர்ஆன் நமக்கு கற்றுத் தருகிறது. நானும் பல முறை அந்த துஆவைப் பற்றி நினைவூட்டியுள்ளேன்.

ஜுப்ளி துஆவிலும் கூட அதுவும் ஒன்றாக இருந்தது. ஜுப்ளிக்காக துஆ செய்யுமாறு கூறியிருந்தீர்கள். இப்போது வருடம் முடிந்து விட்டது. அந்த துஆவையும் நிறுத்தி விடலாம் அல்லவா? என்று சிலர் கேட்கின்றனர்.

முன்னரை விட அதிகம் மனிதன் துஆ செய்ய வேண்டும். ஒரு பழக்கத்தை ஏற்படுத்தவே அந்த துஆக்கள் கூறப்பட்டன. அதன் மூலம் வரக்கூடிய புதிய நூற்றாண்டில் இன்னும் அதிகம் துஆ செய்ய வாய்ப்பு கிடைப்பதற்காகவும் கூறப்பட்டது. எனவே துஆவை நிறுத்தி விடலாமா என்ற கேள்விக்கே இடமில்லை. மாறாக முன்னிலும் அதிகம் துஆ செய்ய வேண்டியது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும்.

திருக்குர்ஆனில் ஒரு துஆ

**ரப்பனா லா துஸிக் குலூபனா பஅத இஸ் ஹதைத்தனா வஹப்லான மின்லதுன்க்க ரஹ்மத்தன் இன்னக்க அன்த்தல் வஹ்ஹாப்** (3:9) – எங்கள் இறைவா! எமது உள்ளங்களை கோணலாக்குவதிலிருந்து பாதுகாத்தருள்வாயாக. நீ எங்களுக்கு நேர்வழி காட்டியபிறகு எங்கள் உள்ளத்தை கோணலாக்காதிருப்பாயாக. உன்னிடமிருந்து எனக்கு ஒரு அருளை வழங்குவாயாக. நிச்சயமாக ஒவ்வொரு அருளையும் நீயே வழங்குகின்றாய்.

இந்த துஆவும் செய்ய வேண்டும். மற்ற துஆக்களையும் செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கண்ணியத்திற்குரிய இறைவனே, எல்லா சமுதாயங்களிலும் உள்ள தகுதி வாய்ந்த உள்ளங்களுக்கு ஹிதாயத் வழங்குவாயாக. அதன் மூலம் உனது ரஸூல் – ரஸூல்மார்களில் மேலானவர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மற்றும் உனது முழுமையான தூய்மையான வேதம் ஆகியவற்றின் மீது அவர்கள் ஈமான் கொள்ள வேண்டும். அவர்களின் கட்டளையின்படி நடக்க வேண்டும். அதன் மூலம் எல்லா வளங்களும் மகிழ்ச்சிகளும் ஒரு உண்மையான முஸ்லிமுக்கு கிடைக்க வேண்டிய ஈருலக நன்மைகளும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். எவற்றை சாதாரண மக்கள் மரணத்திற்குப் பிறகு பெறுகிறார்களோ அதனை ஓர் உண்மையான மூஃமின் இவ்வுலகிலேயே பெறுகிறார்.

பிறகு இன்னொரு துஆவை குறிப்பாக கூற விரும்புகிறேன். அதுபற்றி நான் முதலில் கூறவும் செய்திருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆக்களில் ஒன்றாகிய அல்லாஹும் மஹ்தி கவ்மி ஃபஇன்னஹூம் லா யஃலமூன் – அல்லாஹ்வே இந்த சமுதாயத்திற்கு நேர்வழி காட்டுவாயாக. ஏனென்றால் இவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.

உஹத் போரின்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பற்கள் ஷஹீதானது. அன்னாரின் முகம் காயமுற்றது. சஹாபாக்களுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அப்போது சஹாபாக்கள் இவர்களுக்கு எதிராக துஆ செய்யுங்கள் என்று கூறினர். சாபம் கொடுப்பவனாக நான் அனுப்பப்படவில்லை. மாறாக இறைவன்பக்கம் அழைப்பவனாகவும், ரஹ்மத்திற்கு காரணமாகவும் அனுப்பப்பட்டுள்ளேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள் துஆ செய்தார்கள்.

**அல்லாஹும் மஹ்தி கவ்மி ஃபஇன்னஹும் லா யஃலமூன்** – அல்லாஹ்வே என் சமுதாயத்திற்கு நேர்வழி காட்டுவாயாக. ஏனென்றால், இவர்கள் என்னை அறியவில்லை. இந்த துஆதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் கற்றுத் தரப்பட்டது. அவர்களது ஜமாஅத்தும் செய்ய வேண்டும். குறிப்பாக இக்காலத்தில் பாகிஸ்தானின் நிலைமையை கவனத்திற் கொண்டு இந்த துஆ செய்ய வேண்டும். நமது எதிர்ப்பில் பெரும் வளர்ச்சி பெற்று இஸ்லாமிய போதனைகளை முற்றாக மறந்து விட்டனர். மறந்துதான் போகும். அவர்களின் செயல்கள் அத்தகையவையாகும். இதனால் பெரும் பிரச்சனைகளில் சிக்கியுள்ளனர். என்ன நடக்கிறது? இனி என்ன நடக்கும் என்பதை இவர்கள் புரிய இயலவில்லை. ஹிதாயத்தின் பக்கம் இவர்கள் காலெடுத்து வைக்காத வரை இதுதான் கதி. இதே நிலை தொடரும். எனவே, இந்த சமுதாயம் இந்த நாட்டின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. மன வேதனையுடன் துஆ செய்யுங்கள். அஹ்மதிகளை எதிர்த்து தினமும் அவர்கள் ஏதாவது வேலை செய்து கொண்டே இருக்கின்றனர். இக்காலத்தில் உயிருக்கு அந்நாட்டில் எந்த மதிப்பும் இல்லை. ஒவ்வொருவரின் உயிரும் ஆபத்தில்தான் இருக்கிறது. ஆனால், அஹ்மதிகளைக் கொல்லக் காரணம் அவர்கள் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு விட்டார்களாம்! தினமும் ஏதாவது ஒரு ஷஹாதத் செய்தி அங்கிருந்து வந்துகொண்டிருக்கிறது. அல்லது யாரையாவது சில விஷயங்களைக் கொண்டு தொல்லை கொடுக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் நமது முபல்லிக் சாஹிப் முஸ்லிஹ் மவ்வூது தினக் கூட்டத்தை முடித்து விட்டு திரும்பி வரும் வழியில் பஸ்ஸை எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறார். திடீரென்று மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். அருகில் இருந்தோர் சிதறி ஓடத் தொடங்கினர். சுட்டு விட்டு போகும்போது அடையாளம் தெரிந்து விடுமோ என்று பயந்து திரும்பி வந்து மீண்டும் சுட்டனர். கால்களில் துப்பாக்கிக் குண்டுகள் இருக்கின்றன. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அல்லாஹ் அவருக்கு ஆரோக்கியத்தை வழங்குவானாக. இந்த சமுதாயத்திற்கும் அறிவை வழங்குவானாக. இவர்களின் தலைவர்களுக்கும் புரியவில்லை. எவ்வளவு பெரிய நேர்மையற்ற பண்பு தம்மிடத்தில் இருக்கிறது என்று அறிவதில்லை. நாட்டுக்கும் பெரும் பிரச்சனையை உண்டாக்குகின்றனர். அல்லாஹ் கருணை காட்டுவானாக. இப்போது சில ஜனாஸாக்களின் தொழுகை நடத்துவேன். அவர்களின் விவரங்களை கூறுவேன்.

முதலில் கராச்சியைச் சேர்ந்த முபஷ்ஷி அஹ்மத் சாஹிப். இவருக்கு வயது 42. 22 பிப்ரவரி அன்று அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கினர். இன்னாலில்லாஹு வஇன்னா இலைஹி ராஜிஊன். சில காலமாகவே அவர்களுக்கு மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தன. அந்த இலாக்காவின் போலிஸ் இன்ஸ்பெக்டர் ஒரு மத்ரஸாவின் பகுதியில் பணி செய்து கொண்டிருந்தார். அங்கிருந்து இருவர் வெளிப்பட்டுதான் சுட்டனர். நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை என்றதும் தேட தொடங்கியதும்தான் அடையாளம் தெரியாத சிலர் அவரை சுட்டு விட்டு சென்றிருப்பது தெரிய வந்தது. நல்ல தூய்மையான தொழுகையில் பேணுதல் உள்ள அஹ்மதியாவார். தஃவத்தே இலல்லாஹ்வில் ஆர்வம் உள்ளவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. அவர் தனது இரு மகன் ஒரு மகள். ஒரு மனைவியை அவரது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அவர்களும் பைஅத் செய்தவர்கள். அவர்களை பாதுகாப்பானாக. அவனே அவர்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா நமது அன்பிற்குரிய அஹ்மதி சகோதரர் முனீர் ஹாமித் சாஹிப். ஆப்பிரிக்க அஹ்மதி. 70 வயதில் வஃபாத் ஆகியுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

1957 -ல் தமது 15 வயதில் இவர் பைஅத் செய்து அஹ்மதியானவர். மிகவும் தூய்மையான அர்ப்பணிப்பு மனப்பான்மையுள்ள விசுவாசமிக்க அஹ்மதியாவார். ஜமாஅத் பணிகளில் எப்போதும் முன்னணியில் நிற்பவர் ஆவார். அமெரிக்காவின் முதல் National காயித் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக பதவி வகித்தவர். 30 வருடமாக பிலடெல்மியாவின் ஜமாஅத் தலைவராக இருந்தார். 1997 -ல் இருந்து வஃபாத் வரை ஜமாஅத் அமெரிக்காவில் நாயிப் அமீராக பதவி வகித்தார். இவரது பெற்றோர் கூட முஸ்லிமாக இருக்கவில்லை. தந்தையாருக்கு மார்க்க ஈடுபாடு இல்லை. ஆனால் தாயார் Church -க்கு வருமாறு இவரை அழைத்துக் கொண்டிருந்தார். நிறைய குழந்தைகள் இருந்தும் இவரிடம் இவரது தாயாருக்கு மிகவும் அன்பு இருந்தது. அவருக்கு இஸ்லாம் ஒப்புக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தபோது இவரது சகோதரர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஒருமுறை இவரது தாயார் நோயுற்று இருந்தார். அந்நிலையில் இவரது சகோதர சகோதரிகள் இவரது பெயர் முனீர் அஹ்மத் என்று இருந்ததால் தமது குடும்பப் பெயர் பட்டியலிலிருந்து நீக்கி விட்டனர். முஸ்லிம் பெயர் இருந்தால் நமக்கு ஊரில் பெரும் எதிர்ப்பு சந்திக்க நேரிடும் என்று நினைத்தனர்.

இவ்வாறு சிறு வயதில் அவர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டவர். அவர் பைஅத் செய்ய விரும்பிய காலத்தில் ஜமாஅத்தில் ஒரு சட்டம் இருந்தது. சிறுவர்கள் பைஅத் செய்ய விரும்பினால் அவரது தாயாரோ தந்தையாரோ அப்போது அவரது குடும்பத்து பெரியவர் ஒருவரின் கையொப்பம் வேண்டும். இன்னார் தனது சுய விருப்பத்தின்படியே அடுத்த மதத்தில் இணைகிறார் என்பதை வீட்டுப் பெரியவர்கள் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். இவருடைய பைஅத் Form நிரப்பப்பட்ட போது தாயாரிடம் கையொப்பம் வாங்க சென்றபோது தாயார் மறுத்து விட்டார். பிறகு அவருக்கு புரிய வைத்தார். உடனே தமது பத்து குழந்தைகளிலும் ஆன்மீக ரீதியாக இவரே முன்னணியில் நிற்பவர் என்று அந்த தாய் உணர்ந்து கொண்டார். நான் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் படித்து அஹ்மதியானேன். உண்மை எனக்கு தெளிவானது என்று கூறினார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு அந்த சிறு வயதில் அவர் கடிதம் எழுதினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து பதிலும் வந்தது. அந்தக் கடிதம் படித்ததும் தமது ஈமான் மேலும் வளர்ச்சியடைந்ததாகக் கூறுகிறார். எளிய சாதாரணமான மனிதர். நல்ல தூய மனிதர். மக்களுடன் இனிய முறையில் பழகுபவர். ஜமாஅத் கூட்டங்களில் மிகவும் நல்ல சொற்பொழிவு ஆற்றக் கூடியவர். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பிரியம் கொண்டவர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் கூறினாலே அவரது கண்களில் கண்ணீர் மல்கும்.

கலீஃபாக்களுடன் நல்ல தொடர்பு பிடிப்பு இருந்தது. முதன்முறை இலண்டனில் என்னை சந்தித்தார். பங்களாதேஷ் ஜல்ஸாவுக்குப் போகும் வழியில் என்னைப் பார்க்க வந்தார். பங்களாதேஷ் ஜல்ஸாவிலிருந்து திரும்பும்போது இரண்டாவது முறை என்னை சந்தித்தார். பங்களாதேஷ் ஜல்ஸா மற்றும் தங்களது சந்திப்புக்குப் பிறகு நான் புத்துணர்வு பெற்றுள்ளேன் என்று கூறினார். எப்போது என்னை சந்தித்தாலும் மிகவும் உணர்ச்சிப் பூர்வமாகி விடுவார். அமெரிக்காவுக்கு கடந்த வருடம் நான் சென்ற போது அவர் நோயுற்று

இருந்ததால் ஜல்ஸாவில் கலந்து கொள்ளவில்லை. அது சாதாரண நோயாக இருந்திருக்கும் என்று நினைத்தேன். வீட்டினருக்கும் கூட மரண நோய் அவரைப் பற்றியிருப்பது தெரியாது என்றே நினைக்கிறேன். இவ்வளவு கடும் நோயுற்றிருப்பதாக எனக்கு தெரிய வந்திருந்தால் அவரது வீட்டில் போய் அவரை சந்தித்து வந்திருப்பேன். எப்படியாவது அதற்காக நேரத்தை மிச்சப்படுத்தி போய் வந்திருப்பேன். எவ்வாறிருப்பினும் அவரது தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக. ஆமீன். அவரது ஒரு விதவை ஒரு மகன் இரு மகள்கள். முனீர் அஹ்மத் சாஹிபின் நன்மைகளைத் தொடர்ந்து நிலைநாட்டும் தகுதியை அவரது குடும்பத்திற்கு வழங்குவானாக. இவரும்கூட நான் கூறியது போன்று அல்லாஹ் நேர்வழியின் பக்கம் சிறப்பான வழிகாட்டிய மக்களுள் ஒருவர் ஆவார். அவரது தாயாரின் பத்து குழந்தைகளில் இவர் ஒருவருக்கு தான் அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது.

மூன்றாவது ஜனாஸா முகர்ரம் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் தர்வேஷ் காதியான். 25 ஜனவரியில் தமது 83-வது வயதில் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நல்ல நேர்மையானார். தொழுகையைப் பேணுதல் உள்ளவர். இளமையில் காலத்திலேயே காதியானுக்கு வந்து மத்ரஸா அஹ்மதிய்யாவில் சேர்ந்து படித்து வாழ்வை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க இராணுவத்தில் இணைந்தார். பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கட்டளைக்கு இணங்க மீண்டும் ஜமாஅத் பணிக்கு திரும்பினார். நாஸிர் பைத்துல் மால் ஆமத் வக்ரஜ், நாஸிர் வக்ஃபே ஜதீத், பெய்ரூன் ஆகியவற்றில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். 3 மகள்கள், 3 மகன்கள். அவரது மகன் நஸீர் அஹ்மத் ஆரிப் சாஹிப் உமூரே ஆமா காதியானில் பணியாற்றி வருகிறார்.

அடுத்த ஜனாஸா செய்யது அஹ்மத் யூரா சாஹிபா கமால் யூசுஃப் சாஹிப் மனைவி. இவரும் நீண்ட நோயுற்றிருந்தார். கேன்சர் இருந்தது. 25 ஜனவரியில் வஃபாத் ஆகி விட்டார். இவர் ஹஸ்ரத் ஸய்யித் சர்வர் ஷாஹ் சாஹிப் அவர்களுடைய பேத்தி ஆவார். நல்ல விருந்தோம்பும் பண்பு உள்ளவர். ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு உள்ளவர். அவரது தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக. இவருக்கு ஒரு மகள் 2 மகன்கள். இவரது கணவர் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கிறார்.

இன்னொரு ஜனாஸா அமத்துல்லாஹ் சாஹிபா. பஷீர் அஹ்மத் சாஹிப் சியால்கோட்டி ரப்வாவின் மனைவி.

பஷீர் அஹ்மத் சியால்கோட்டி. இவர் தனது மனைவியின் மரணத்திற்குப் பிறகு சில நாட்கள் இவர்களின் மரணமும் நிகழ்ந்தது. இலண்டனில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நமது முரப்பி உடைய பெற்றோர்கள்தான் இவ்விருவரும்.

இருவரும் நல்ல தூய்மையாளர். துஆவில் ஆர்வமுள்ளவர்கள். அல்லாஹ்வின் அருளால் ஆரம்பகால அஹ்மதிகள். ரப்வாவுக்கு ஹிஜ்ரத் செய்து தொழில் செய்தனர். இவர்கள் இருவருக்கும் 5 மகன்கள் ஒரு மகள். அல்லாஹ் இவ்விருவரின் தகுதியையும் உயர்த்துவானாக. மக்ஃபிரத்துக்கு வழங்குவானாக. ஜுமுஆவுக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகை நடைபெறும்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 27.02.2009**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**